**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவினாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவினாசி**

**2023 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 11–ஆம், நாள் திங்கட்கிழமை**
**CNR No.TNTI12-000210-2015**
**இ.ம.எண்கள்.4/2023, 5/2023, 6/2023**
**இன்**
**அசல் வழக்கு எண்.158/2015**

பி.சுப்பிரமணியம்

... மனுதாரர்/வாதி

.. எதிர் ..

1.என்.சிவசாமி (இறப்பு)

2.என்.அருணாச்சலம் (இறப்பு)

3.சரஸ்வதி

4.விமலா

5.செந்தில்பிரபு

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

6.ஏ.வள்ளியம்மாள்

7.சிவமணி

8.அண்ணபூரணி

...6-8 எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள்

இம்மனு இறுதியாக 28.11.2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.கார்த்திக் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 8 வரையிலான

எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**பொது உத்தரவு**

காலவரையறை சட்டம் பிரிவு 5–ன்படி 542 நாட்கள் காலத்தை மண்ணித்து உத்தேச தரப்பினர்களை தாவாவில் கட்சி சேர்க்க கோரியும், உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 4–ன்படி 6 முதல் 8 வரையிலான உத்தேச தரப்பினர்களை 6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க கோரியும் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 9–ன்படி உத்தேச தரப்பினர்களுக்கு எதிராக அற்றுபோன வழக்கை ரத்து செய்ய கோரியும், மனுதாரரால் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு உரையின் சுருக்கம்:–**

2.1.) மனுதாரர் தாவா சொத்தின் முழுமையான உரிமையாளர் என்றும், வருவாய் ஆவணங்கள் மனுதாரரின் பெயரில் உள்ளதாகவும், தாவா சொத்தில் மனுதாரர் காய் கறி விவசாயம் செய்து வருகிறதாகவும், அதற்கான கிஸ்து வரி செலுத்தி அனுபவித்து வருகிறதாகவும், எதிர்மனுதாரர்கள் மனு சொத்தின் அருகில் உள்ளவர்கள் என்றும், எதிர்மனுதாரர்கள் மனு சொத்தை விற்கும்படி மனுதாரரை மிரட்டுவதாகவும், அதனால் மனுதாரர், எதிர்மனுதாரர்கள் மீது உறுத்துக்கட்டளை

பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.2.) தாவா நிலுவையில் இருந்த போது 1ம் எதிர்மனுதாரர் என்.சிவசாமி கடந்த 25.07.2021ம் தேதி 3 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களை வரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டதாகவும், 3 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளாக தாவாவில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், தாவா நிலுவையில் இருந்த போது 2ம் எதிர்மனுதாரரான என்.அருணாச்சலம் கடந்த 17.11.2021ம் தேதி உத்தேச தரப்பினர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், உத்தேச தரப்பினர்கள் மனு சொத்தினை அவர்களுக்கு விற்கும்படி மனுதாரரை மிரட்டுவதாகவும், உத்தேச தரப்பினர்கள் தாவாவில் கட்சி சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளதாகவும், வேண்டுமென்றே காலதாமதமாக மனு தாக்கல் செய்யவில்லை என்றும், உத்தேச தரப்பினர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும், மனுக்களை அனுமதிக்க வேண்டப்பட்டுள்ளது.

3) <u>7ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையை 3 முதல் 6மற்றும் 8ம் எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>

மனு பொய் என்றும், சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கவேண்டும் என்றும், பத்தி 2–ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், பத்தி 3–ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள்

பொய் என்றும், 1ம் பிரதிவாதி சிவசாமி கடந்த 25.07.2021 அன்று காலமாகிவிட்டார் என்பதை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், 2ம் எதிர்மனுதாரர் அருணாச்சலம் கடந்த 17.11.2021ம் தேதி காலமாகிவிட்டார் என்பதை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், மனுதாரர் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கதக்கதல்ல என்றும், மனுதாரர் மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லாமல் எதிர்மனுதாரர்கள் மனுதாரரை அச்சுறுத்துவதாக கூறியுள்ள காரணங்களை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், 2ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை கட்சி சேர்க்க கோரி மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 542 நாட்களுக்கு உரிய காரணங்களோ, ஆவணங்களோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், மனுக்களை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்பட்டுள்ளது.

4) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இரு தரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்புகளை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**5) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:–</u>**

5.1.) மனு தரப்பினர்களை அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க மனுதாரரை வாதி என்றும், 1 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகள் என்றும்

6 முதல் 8 வரையிலான எதிர்மனுதாரர்கள் உத்தேச தரப்பினர்கள் என்று குறித்துரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக தொடரப்பட்டுள்ளது.

5.2.) மேற்கண்ட சூழ்நிலையில் காலவரையறை சட்டம் பிரிவு 5, உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 9, மற்றும் கட்டளை 22 விதி 4, வகைமுறைகளை இவ்விடத்தில் குறித்துரைக்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளது.

**Section 5 in The Limitation Act, 1963:-**

Extension of prescribed period in certain cases:-

Any appeal or any application, other than an application under any of the provisions of Order XXI of the Code of Civil Procedure, 1908 (5 of 1908), may be admitted after the prescribed period, if the appellant or the applicant satisfies the court that he had sufficient cause for not preferring the appeal or making the application within such period.

Explanation.—

The fact that the appellant or the applicant was misled by any order, practice or judgment of the High Court in ascertaining or computing the prescribed period may be sufficient cause within the meaning of this section.

**ORDER 22 RULE 9 CPC**

Effect of abatement or dismissal.

(1) Where a suit abates or is dismissed under this Order, no fresh suit shall be brought on the same cause of action.

(2) The plaintiff or the person claiming to be the legal representative of a deceased plaintiff or the assignee or the receiver in the case of an insolvent plaintiff may apply for an order to set aside the abatement or dismissal; and if it is proved that he was prevented by any sufficient cause from continuing the suit, the Court shall set aside the abatement or dismissal

upon such terms as to costs or otherwise as it thinks fit.

(3) The provisions of section 5 of the Indian Limitation Act, 1877 shall apply to applications under sub-rule (2).

Explanation-

Nothing in this rule shall be construed as barring, in any later suit, a defence based on the facts which constituted the cause of action in the suit which had abated or had been dismissed under this Order.

**ORDER 22 RULE 4 CPC**

4. Procedure in case of death of one of several defendants or of sole defendant.-

(1) Where one of the two or more defendants dies and the right to sue does not survive against the surviving defendant or defendants alone, or a sole defendant or sole surviving defendant dies and the right to sue survives, the court, on an application made in that behalf, shall cause the legal representative of the deceased defendant to be made a party and shall proceed with the suit.

(2) Any person so made a party may make any defence appropriate to his character as legal representative of the deceased defendant.

(3) Where within the time limited by law no application is made under sub-rule (1), the suit shall abate as against the deceased defendant.

(4)The court whenever it thinks fit, may exempt the plaintiff from the necessity of substituting the legal representatives of any such defendant who has failed to file a written statement or who, having filed it, has failed to appear and contest the suit at the hearing; and judgment may, in such case, be pronounced against the said defendant notwithstanding the death of such defendant and shall have the same force and effect as if it has been pronounced before death took place.

(5) Where,—

(a) the plaintiff was ignorant of the death of a defendant, and could not, for that reason, make an application for the substitution of the legal representative of the defendant under this rule within the period specified in the Limitation Act, 1963 (36 of 1963), and the suit has, in consequence, abated, and

(b) the plaintiff applies after the expiry of the period specified there for in the Limitation Act, 1963 (36 of 1963), for setting aside the abatement and also for the admission of that application under section 5 of that Act on the ground that he had, by reason of such ignorance, sufficient cause for not making the application within the period specified in the said Act,

the court shall, in considering the application under the said section 5, have due regard to the fact of such ignorance, if proved.

5.3.) மேற்கண்ட சட்டவகைமுறையை கவனமாக பரிசீலிக்கையில் இந்திய காலவரையரை சட்டம் உறுப்பு 120, 121–ன்படி இறந்துபோன தரப்பினரின் வாரிசுகளை முறையே 90, 60 (மொத்தம் 150) தினங்களுக்குள் கோப்புக்கு எடுக்க மனு தாக்கல் செய்யவேண்டும் என்பதையும் அவ்வாறு காலவரையறைக்குள் மனு தாக்கல் செய்யவில்லை எனில் அதற்கான போதுமான காரணத்தை குறிப்பிட்டு மேற்படி பிரிவு 5–ன்படி மனு தாக்கல் செய்ய தரப்பினர்களுக்கு உரிமை உள்ளதையும், இறந்து போன நபரின் சட்டப்படியான வாரிசுகளை சேர்த்து வழக்கினை தொடர்ந்து நடத்த அனுமதிக்கலாம் என்பதையும், வழக்கு தரப்பினர்கள் இறந்துவிட்டப்படியால் அவர்களது சட்டப்படியான பிரதிநிதிகளை வழக்கு நடவடிக்கையில் உரிய காலத்திற்குள் சேர்க்க முடியாமல் போனதற்கான போதுமான காரணத்தை இந்நீதிமன்றத்தில் எடுத்து கூறும்பட்சத்தில் இறந்துபோன நபர்களுக்கு எதிராக அற்றுபோன வழக்கினை நீக்கரவு செய்து வழக்கினை தொடர்ந்து நடத்த அனுமதிக்கலாம் என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.

5.4.) முதல் பிரதிவாதி கடந்த 25.07.2021 தேதியில் 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். மேலும், 2ம் பிரதிவாதி கடந்த 17.11.2021 தேதியில் 6 முதல் 8 வரையிலான உத்தேச தரப்பினர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். ஏற்கனவே 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளாக உள்ளார்கள். 2ம் பிரதிவாதியின் வாரிசுகளை 6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க இம்மனுக்கள் காலதாமதத்தை மண்ணிக்கவும், காலம் சென்றவர்களுக்கு எதிராக அற்று போன வழக்கை நீக்கரவு செய்யவும், 6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்கவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் முன்வைத்துள்ள எதிருரையானது காலதாமதத்திற்குரிய காரணத்தை கூறவில்லை என்றும், காலம் சென்றவர்களின் வாரிசுகளை நிரூபிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அதேசமயம் பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்வைத்த வாதத்தில் உத்தேச தரப்பினர்களை தரப்பினர்களாக சேர்த்து வழக்கு விசாரணையை தொடங்க ஆட்சேபணை இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

5.5.) காலம் சென்ற 2ம் பிரதிவாதியின் வாரிசுகளுக்கு வழக்கினை எதிர்த்து கட்சி செய்ய உரிமை எஞ்சியுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனைகளுக்கு முழுமையாக தீர்வு காணவும் பல்வேறு வழக்கு நடவடிக்கைகளை தடுக்கவும் உத்தேச தரப்பினர்களை 6 முதல் 8

வரையிலான பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கினை தொடர நீதியின் நலன் கருதி அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுக்கள் 4/2023, 5/2023, 6/2023 செலவு தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 11.12.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.12.11 18:06:30 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**<u>பிற்சேர்க்கை</u> :–** இல்லை

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.12.11 18:06:41 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.ம.எண்கள்.4, 5, 6/2023
அ.வ.எண்.158/2015
நாள் 11.12.2023
சீரான/வரைவு உத்தரவு
மா.உ.நீ.அவிநாசி